வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – மலர்விழி

தேதி 13.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, உத்தரபிரதேச மாநிலம் ப்ரயாக் ராஜில், 6 ஆயிரத்து 670 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் திரு. ரங்கசாமி, புதுச்சேரியில் இந்திய திரைப்பட விழாவை இன்று துவக்கி வைக்கிறார்.

இந்திய அரசியலமைப்பின் 75ஆம் ஆண்டு பற்றிய விவாதம் இன்று மக்களவையில் நடைபெற்றது.

புதுச்சேரியில் இருந்து பெங்களூரு மற்றும் ஹைதராபாத்துக்கு இம்மாதம் மீண்டும் விமான சேவை தொடங்க உள்ளது.

------------------------------

*பிரதமர்-ப்ரயாக் 1 (19)*

மஹா கும்பமேளா 2025 ஒற்றுமை மற்றும் சமத்துவத்தை பறைசாற்றும் மிகப் பெரிய நிகழ்வு என்றும், இது, உலகம் முழுவதும் பேசப்படும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இன்று, உத்தரபிரதேச மாநிலம் ப்ரயாக் ராஜில் உள்ள சங்கம் நதிக்கரையில் 2025ஆம் ஆண்டு நடைபெற உள்ள மஹா கும்பமேளாவின் துவக்க விழாவில் பங்கேற்று பேசுகையில், இவ்வாறு தெரிவித்த பிரதமர், ப்ரயாக் ராஜ் கும்பமேளாவை முன்னிட்டு, தடையற்ற இணைப்புகளை வழங்கும் உத்தேசத்தில், சுமார் 6 ஆயிரத்து 670 கோடி ரூபாய் மதிப்பில், ரயில் மற்றும் சாலை மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேசும் போது, இந்த கும்பமேளா, ஜாதி, மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட, ஒற்றுமையின் சக்தியை வெளிப்படுத்தும் ஒரு அரிய நிகழ்வாக இருக்கும் என்றும், புனித நகரமான ப்ரயாக் ராஜில் ஒரு புதிய வரலாறு படைக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும், இந்த மஹா கும்பமேளா, ஒரே பாரதம்-உன்னத பாரதம் கோட்பாட்டின் உண்மை

மாண்புகளை பறைசாற்றும் என்றும் தெரிவித்தார். முந்தைய ஆட்சிக் காலங்களில், கும்பமேளாக்களுக்கு பெரும் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்றும், தற்போதைய மத்திய அரசு கும்பமேளாக்கள் மற்றும் அதன் நகரங்களில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். இன்றைய நிகழ்ச்சியின்

*பிரதமர்-ப்ரயாக் 2 (10)*

போது பிரதமர் திரு. நரேந்திர மோடி, பரத்வாஜ் ஆசிரமம், அக்க்ஷய்வத், அனுமான் கோவில் உள்ளிட்ட வழிபாட்டு தலங்களுக்கான பாதைகளையும் திறந்த வைத்தார். மேலும், தூய்மை இந்தியா மற்றும் புனித கங்கை திட்டங்களின் ஒருபகுதியாக, பல்வேறு வழிகள் மூலம் கங்கை நதிக்கு சென்று சேரும் நீர் வழித்தடங்களை சுத்தப்படுத்தி, கங்கை நதி மாசு அடையாமல் தடுப்பதற்கான தூய்மைத் திட்டங்களையும் துவக்கி வைத்தார். கும்பமேளாவில் பங்கேற்க உள்ள பக்தர்களுக்கு வழிகாட்டும் **சஹாயக்** எனும் கையேடு ஒன்றையும் பிரதமர் நிகழ்ச்சியின் போது வெளியிட்டார். இந்த மஹா கும்பமேளா 2025, வரும் ஆண்டு ஜனவரி 13ஆம் தேதி துவங்கி, பிப்ரவரி 26ஆம் தேதி வரை ப்ரயாக் ராஜில் நடைபெற உள்ளது.

------------------------------

*திரைப்பட விழா 1 (5)*

புதுச்சேரி அரசு செய்தி மற்றும் விளம்பரத் துறையின் இந்திய திரைப்பட விழா 2024, இன்று மாலை புதுச்சேரியில் துவங்க உள்ளது. 5 நாட்கள் நடைபெற உள்ள இந்த திரைப்பட விழாவை, சுய்ப்ரேன் வீதியில் உள்ள அலையன்ஸ் பிரான்சேஸ் கலையரங்கில் முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று மாலை துவக்கி வைக்கிறார். இதுகுறித்த கூடுதல் தகவல் தொகுப்பு…..

(வாயஸ்)

------------------------------

*புத்தக கண்காட்சி (10)*

புதுச்சேரி எழுத்தாளர் புத்தக சங்கத்தின் 28ஆவது புத்தகக் கண்காட்சி இன்று புதுச்சேரி வேல். சொக்கநாதன் திருமண மண்டபத்தில் துவங்கியது. 10 நாட்கள் நடைபெற உள்ள இந்த கண்காட்சியை முதலமைச்சர் திரு. ரங்கசாமி துவக்கி வைத்து புத்தகங்களை பார்வையிட்டார். இந்த புத்தக கண்காட்சியில் பல்வேறு பதிப்பகத்தாரின் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன. 10 சதவிகிதம் முதல் 25 சதவிகிதம் வரை தள்ளுபடி விலையில் புத்தகங்கள் விற்கப்படும் என்று கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். கண்காட்சி குறித்து

புதுச்சேரி எழுத்தாளர் புத்தக சங்கத்தின் தலைவர் முனைவர் திரு. முத்து கூறுகையில்……..

(வாய்ஸ்)

------------------------------

*மக்களவை-அரசியலமைப்பு 1 (19)*

மக்களவையில் இன்று, இந்திய அரசியலமைப்பின் 75 ஆண்டுகால பயணத்தை குறித்த சிறப்பு கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த கலந்துரையாடலை துவக்கி வைத்து பேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், சமூகம், பொருளாதாரம், அரசியல் மற்றும் கலாச்சாரங்கள் உள்ளிட்ட அனைத்து அம்சங்கள் மூலம் இந்திய அரசியல் அமைப்பு, நாட்டை கட்டமைப்பதாக தெரிவித்தா ா. நாட்டின் நாகரீக மாண்புகளின் வெளிபாடே அரசியலமைப்பு என்று கூறிய அமைச்சர், 75 ஆண்டுகளுக்கு முன்னர், அரசியலமைப்பு நிர்ணய சபை, சுதந்திரம் அடைந்த புதிய இந்தியாவிற்கான அரசியலமைப்பை இறுதி செய்யும் பணிகளை மேற்கொண்டதாகவும், அதன்பின், 3 ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்ட தீவிர விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்களுக்கு பின்னர், இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். அரசியல் நிர்ணய சபையால் உருவாக்கப்பட்ட இந்த அரசியலமைப்பு, வெறும் ஒரு ஆவணமாக மட்டும் அல்லாமல், நாட்டு மக்களின் விருப்பத்தின் வெளிபாடாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

ஆனால், கடந்த சில ஆண்டுகளாக, நாட்டின் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி, அரசியலமைப்பு தங்கள் கட்சியினால் உருவாக்கப்பட்டது என்னும் பிம்பத்தை ஏற்படுத்த முயல்வதாக, காங்கிரஸ் கட்சியை மறைமுகமாக சாடினார். அரசியலமைப்பு எந்த ஒரு தனி கட்சியின் மூலம் உருவானது அல்ல என்றும், இந்திய விழுமியங்களை

*மக்களவை-அரசியலமைப்பு* 2 (16)

உள்ளடக்கிய ஈடு இணையற்ற ஆவணம் என்றும், இந்திய அரசியலமைப்பில் எழுதப்பட்டுள்ள தர்மத்தின் அடிப்படையில், மத்திய அரசு செயல்படுவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார். **அனைவருடனும், அனைவருக்குமான வளர்ச்சி, அனைவருக்குமான நம்பிக்கை மற்றும் அனைவரின் முயற்சியால்** என்ற கோட்பாட்டின் அடிப்படையில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வழிகாட்டுதலின் கீழ், அரசு செயல்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார். இந்தியாவில்தான் ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்த ஒருவர், நாட்டின் குடியரசுத் தலைவர் ஆகவோ, பிரதமர் ஆகவோ முடியும்

என்றார். மதன் மோகன் மாளவியா, லாலா லஜ்பத் ராய், பகத்சிங், வீர் சாவர்க்கர் உள்ளிட்ட தலைவர்களின் எண்ணங்கள் இந்திய அரசியலமைப்பை வலிமையாக்கியதாக திரு. ராஜ்நாத் சிங் விவாதத்தின் போது குறிப்பிட்டார்.

விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய காங்கிரஸ் கட்சியின் திருமதி பிரியங்கா காந்தி வாத்ரா, அரசியலமைப்பு, நாட்டு மக்களை பாதுகாக்கும் ஆயுதம் என்றும், அரசியலமைப்பு, ஜனநாயகத்தின் ஆன்மா என்று சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ்-வும் குறிப்பிட்டனர்.

-----------------------------

*புதுச்சேரி-விமானம் (17)*

புதுச்சேரியில் இருந்து பெங்களூரு மற்றும் ஹைதராபாத்துக்கு மீண்டும் விமான சேவை தொடங்க உள்ளது.

புதுச்சேரியில் நிர்வாக காரணங்களுக்காக இவ்வாண்டு மார்ச் 30ஆம் தேதியடன் விமான சேவைகள் நிறுத்தப்பட்டன. இந்நிலையில், இம்மாதம் 20ஆம் தேதி முதல் பெங்களூரு மற்றும் ஹைதராபாத் நகருக்கு மீண்டும் தினசரி விமான போக்குவரத்து துவங்க உள்ளதாக, விமான நிலைய இயக்குநர் திரு. ராஜசேகர ரெட்டி தெரிவித்துள்ளார். ஹைதராபாத் மற்றும் பெங்களூரு நகரங்களுக்கு ATR 72 ரக விமான சேவை, வரும் 20 ஆம் தேதி முதல் துவங்கும் என்றும், பெங்களூருவில் இருந்து தினமும் காலை 11.10க்கு மணிக்கு புறப்படும் விமானம், பகல் 12.25 மணிக்கு புதுச்சேரி வந்தடையும் என்றும், மதியம் 12.45 மணிக்கு புதுச்சேரியில் இருந்து புறப்பட்டு மதியம் 2.30 மணிக்கு ஹைதராபாத் சென்றடையும் என்றும், ஹைதராபாத்தில் இருந்து மதியம் 3.05க்கு புறப்படும் விமானம் மாலை 4.50 மணிக்கு புதுச்சேரி வந்தடையும் என்றும், பின்னர், மாலை 5.10 மணிக்கு புதுச்சேரியில் இருந்து புறப்பட்டு, மாலை 6.35 மணிக்கு பெங்களூரு சென்றடையும் என்று புதுச்சேரி ஆகாஷ்வாணி செய்திப் பிரிவுக்கு அவர் அளித்த பிரத்யேக பேட்டியில் தெரிவித்துள்ளார். இதுகுறித்து மேலும் தெரிவித்த அவர்...... (வாய்ஸ்)

-----------------------------

*கருத்தரங்கம் (11)*

வேத காலத்தில் பெண்களின் நிலைப்பாடு என்ற தலைப்பிலான கருத்தரங்கம், இன்று புதுச்சேரியில் துவங்கியது. காலாபட்டில் உள்ள

வேதிக் வித்யா கேந்திர வளாகத்தில் இன்று துவங்கிய இந்த 3 நாள் கருத்தரங்கை பத்மஸ்ரீ முனைவர் சுகமா ஆச்சார்யா துவக்கி வைத்தார். வேத காலத்தில் பெண்கள் ஆண்களுக்கு சமமாக நடத்தப்பட்டதாகவும், பெண்களை மையமாக வைத்துதான் நம்முடைய கலாச்சாரங்கள் அனைத்தும் இருந்ததாகவும் துவக்க விழாவின் போது திரு. ஆச்சார்யா குறிப்பிட்டார். வரும் 15ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த கருத்தரங்கில், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், சமஸ்கிருத வல்லுனர்கள், வேத காலத்தில் பெண்களின் நிலைப்பாடு மற்றும் சமூகப் பணியில் பெண்களின் பங்கு பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கின்றனர்.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, உத்தரபிரதேச மாநிலம் ப்ரயாக் ராஜில், 6 ஆயிரத்து 670 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் திரு. ரங்கசாமி, புதுச்சேரியில் இந்திய திரைப்பட விழாவை இன்று துவக்கி வைக்கிறார்.

இந்திய அரசியலமைப்பின் 75ஆம் ஆண்டு பற்றிய விவாதம் இன்று மக்களவையில் நடைபெற்றது.

புதுச்சேரியில் இருந்து பெங்களூரு மற்றும் ஹைதராபாத்துக்கு இம்மாதம் மீண்டும் விமான சேவை தொடங்க உள்ளது.